ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ரு. விபவஹ சித்திரைமீ பகுதி ச.
Vol 5. *April & May 1928.* No. 4.

தத்வத்ரய விசாரம்.

சித்து அசித்து ஈசுவரன் என்ற இம்மூன்றுமே எப்பொழுதுமுள்ள தத்வப்பொருள்களென்பது நமது ஸித்தாந்தத்தின் துணிபு. நம்மால் காணப்படுகிற ஒவ்வொரு பொருளிலும் இந்த மூன்று தத்வங்களுமுள்ளன. ஒப்புபர்வற்ற ஸர்வேசுவரன், லோகோற்பத்திக்கு முன்புள்ள தசையாகிய காரணாவஸ்தையில் ஸூக்ஷ்ம சிதசித்துக்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டும், லோகோற்பத்திக்குப் பின்புள்ள தசையாகிய கார்யாவஸ்தையில் ஸ்தூல சிதசித்துக்களைத் தனக்குச் சரீரமாகக்கொண்டுமிருக்கின்றானாகலால் இம்மூன்று தத்வங்கள் ஒருமித்தில்லாத பொருளொன்றுமில்லையென்பது பெறப்படும். இன்னும் நமது ஸித்தாந்தத்திற்கு அசாதாரணமாக வழங்குகின்ற விசிஷ்டாத்வைதம் என்பதன் சொற்பொருளை ஆராய்ந்தால் தத்வப்பொருள் மூன்றேயுள்ளன என்பதைத் தெளிவாக அறியலாம். இதன் பொருளாவது:— சேதனாசேதனங்களை விசேஷணமாகவுடைய பிர்ம்மம் ஒன்றே என்பதாம். ஈண்டு விசேஷணமாவது விசேஷ்யத்தைவிட்டுப் பிரியாத தர்மமாம்.

விசேஷணம் * போகோபகரணமென்றும் † லீலோபகரணமென்றும் இரண்டு வகைப்படும். இவ்விரண்டு வகைகளுள் போகோப

* போகோபகரணமாவது:— இஷ்டபலரூப ஸாதனமாம்.

† லீலோபகரணமாவது:— காலாந்தரத்தில் ஒருபலனில்லாது அப்பொழுதுண்டாகின்ற இன்பத்திற்குக் காரணமான வ்யாபார ஸாதனமாம்.

கரண வஸ்துக்களாவன:— பரமபதத்திலுள்ள நித்யமுக்தர்களும், திவ்யாயுதாபரண விமான்கோபுராதிரூபகங்களாயிருக்கும் சுத்த சத்வமயமான அசேதனங்களுமாம். லீலோபகரண வஸ்துக்களாவன:— மூலப்ரக்ருதிக்கு இவ்வருகுள்ள சேதனுசேதனங்களாம். ஆக உபயவிபூதியிலுள்ள எல்லாப்பொருள்களும் தத்வத்ரயமாகவே காணப்படுகின்றன.

இனி, தத்வத்ரயம் என்று வழங்கத்தகாத இடமுமுண்டென்பது நிரூபிக்கப்படும். அதுவருமாறு:—

எம்பெருமான் தன்னிச்சையாலே பரிக்ரஹித்ததும், தனக்கு அசாதாரணமாயிருப்பதுமாகிய திவ்யமங்களவிக்ரஹத்தோடே கூடியிருக்கிற நிலையில் திவ்யமங்களவிக்ரஹமாகிய அசித்தத்வமும் அதை அதிஷ்டித்துநிற்கிற ஈசுவரதத்வமுமாகிய இரண்டுமே கொள்ளக்கிடக்கின்றன. இங்ஙனங்கொண்டால் தத்வத்ரயம் ஒருமித்திராத வஸ்துவில்லை என்றுரைக்கின்ற நமது ஸித்தாந்தத்திற்குக் குற்றம் வாராதோவென்னில்; பிராட்டிமாரெல்லாம் எம்பெருமானுக்குத் தேவ்யராயிருக்குந் தன்மையால் ஒருநிகரினராய் விளங்கினுலும் பெரியபிராட்டியார் எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகபூதையாய், அவனுக்கு ப்ரதானமஹிஷியாய் விளங்குகிறுளென்று பிராட்டிமார்களில் பெரியபிராட்டியாருக்கு ஓர் விவஸ்தையிட்டு வழங்குவதுபோல தத்வத்ரயத்தின் கூட்டுறவில்லாத பொருளொன்றுமில்லையென்றுரைத்தாலும், எம்பெருமான் பரத்வாதிகளில் திவ்யமங்கள விக்ரஹத்தோடு நிற்கிறநிலைகளை ஒழித்து மற்றெல்லாம் தத்வத்ரயமாகவே விளங்குகின்றனவென்று கொண்டால் குற்றம் வாராது.

இதனுல் தத்வத்ரயமென்று வழங்குதற்கு ஓர் விவஸ்தையுண்டென்பது தோற்றுகிறதினுல் நித்யஸூரிகளாகிய ஜீவர்கள் தமக்கென்று அபிமானித்துக் கொண்டிருக்கின்ற அப்ராக்ருத திவ்யமங்களவிக்ரஹம்போல பரத்வாதிநிலைகளிலுள்ள திவ்யமங்களவிக்ரஹமாகிய அசித்தை அபிமானித்துக் கொண்டிருப்பதொரு ஜீவனில்லாததினுல் அந்நிலைகளில் தத்வத்வயமே யுள்ளனவென்று கொள்

ளத்தக்கது. இஃதன்றி அந்தத் திவ்யமங்கள விக்ரஹத்திலும் அசித்தபிமானியாயிருக்கின்ற சித்தின் ஆவேசமுண்டெனக்கொண்டு ஆண்டும் தத்வத்ரயம் கொள்ளினுமிழுக்காது.

நம்பூர்வாசார்யர்கள், பரத்வாதிகளில் எம்பெருமானுக்கு அசாதாரணமாயிருக்கின்ற திவ்யமங்களவிக்ரஹத்தில் அதையபிமானித்துக்கொண்டிருக்கிற ஜீவனில்லாததினால் அங்கு ஈசுவரதத்வமும், அசித்தத்வமுமாகிய இரண்டுமேயுள்ளன; ஆதலால் பரத்வாதிகளில் § நாராயணத்வபூர்த்தியில்லை; இனி, ஸர்வேசுவரனுக்கு ஆறுவது நிலையாகச் சொல்லப்படுகிற ஆசார்யத்வத்திலேதான் நாராயணத்வ பூர்த்தியுண்டெனத் திருவுள்ளம்பற்றினர்கள்.

இவர்கள் இம்முறையை உள்ளவாறறிந்து அருளிச்செய்வதற்கு மதுரகவியாழ்வார் திருமங்கைமன்னன் என்ற இவர்களருளிச்செயலே மூலமாயிருக்கும். அவை:— "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள், நிற்கப்பாடி என்னெஞ்சுள் நிறுத்தினன்" என்பதும் "தேவுமற்றறியேன்" என்பதும், "மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங்கற்று நான், உற்றதுன்னடியார்க்கடிமை..." என்பதுமாம்.

இங்கு ஸகலவேததாத்பர்யமான பாகவத சேஷத்வத்தைத் தம்மாசார்யரான நம்மாழ்வார் "பயிலுஞ்சுடரொளி" "நெடுமாற்கடிமை" என்ற இரண்டு திருவாய்மொழிகளால் அருளிச்செய்து அவ்வர்த்தவிசேஷம் நெஞ்சில் நிலைநிற்கும்படி நிறுத்தினரென்பார் "மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள் நிற்கபாடி யென்னெஞ்சுள் நிறுத்தினன்" என்றார். இதனால் வேதப்பொருள் ஈசுவரனென்ப

---

§ நாராயணத்வபூர்த்தியாவது:— ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருத்தலின் பூர்த்தியாம். நாரபதம் எம்பெருமானை ஒழிந்த எல்லாவஸ்துக்களையும் குறிப்பிடும். அயநபதம் அவற்றுக்கு ஆதாரமாய் விளங்குகின்ற பகவத்ஸ்வரூபத்தையுணர்த்தும். ஆக நாராயணன் எனவே எல்லாவஸ்துக்களுக்கும் ஆதாரமாய் விளங்குகின்றவனென்பது பெறப்படும். பரத்வாதிகளில் ஜீவதத்வத்தை ஒழித்து தத்வத்வயமே கொள்ளக்கிடக்கின்றதினால் அங்கு எல்லாவற்றுக்கும் ஆதாரமாயிருக்கின்றானென்றுசொல்லநற்கிடமில்லை. ஆதலால் அவ்விடத்தில் நாராயணத்வபூர்த்தியில்லையென்று கொள்ளத்தக்கது.

தும், வேதத்தின் உட்பொருள் ததீயரென்பதும் பெறப்படும். மேலும் நம்மாசார்யரான் நம்மாழ்வாரிடத்தில் ஸர்வபூர்த்தியு முண்டு; ஆகலால் இவரைத் தவிர்த்துப் பிறிதோர் தெய்வமறியே னென்பார் "தேவுமற்றறியேன்" என்றார். திருமங்கைமன்னன் ஸகலவேதஸாரமான திருமந்த்ரத்தின் தாத்பர்யம் அருளிச்செய்ய வந்தவிடத்தில் திருமந்த்ரம் எம்பெருமானுடைய காரணத்வம் முதலிய பல வர்த்தங்களைச் சுட்டியுணர்த்துவதாயிருந்தாலும் ததீய சேஷத்வத்தை யுணர்த்துவதுதான் அதற்கு முக்யதாத்பர்யமாகும் என்று அருளிச்செய்தார்.

இதனால் "அறிவாருயிரானுய்" என்றபடி ஆழ்வார்போன்ற வரைப்பற்றிநிற்கிற எம்பெருமானிடத்திலேதான் நாராயணத்வ பூர்த்தியுண்டென்ப துணர்த்தலாயிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[ஸ்ரீமதுபயவேதாந்த வித்வான் காரப்பங்காடு சிங்கராசார்யஸ்வாமி எழுதுவது.]

(49-ம் பக்கத்தொடர்ச்சி.)

"அத்யாபயாமாஸ பித்ரூந் சிசுராங்கிரஸ: கவி:। புத்ரகா இதி ஹோவாச ஜ்ஞாநேந பரிக்ருஹ்ய தாந்" "பித்ரூநத்யாபயாமாஸ சிசுராங்கிரஸ: கவி:, புத்ரகா இதி ஹோவாச ஜ்ஞாநேந பரிக்ருஹ்யதாந்" இதற்கு அர்த்தம்:— சிசுவாயிருக்கிற ஆங்கிரஸர் பிதிர்க்களை அத்தியயனம் பண்ணிவைத்தார்; தான் புத்திரனு யிருந்தபோதிலும் வித்யாப்ரதானம்பண்ணினபடியால் பிதிர்க்களைப் புத்திரர்களே என்று கூப்பிட்டார் என்பதாம்.

திருநெடுந்தாண்டகத்தில் "வளர்த்ததனுற் பயன்பெற்றேன் வருகவென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்தார்.

ரகுவம்சத்தில், ராவணவதாநந்தரம், பெருமாள் புஷ்பகவிமானத்தில் எழுந்தருளி அயோத்தியை யடையும்போது பரதாழ்வான் பெருமாளைத்தண்டம்ஸமர்ப்பித்தபின்பு "𑌦𑍁𑌰𑍍𑌜𑌾𑌤𑌬𑌨𑍍𑌧𑍁𑌃 𑌅𑌯𑌂 𑌋𑌕𑍍𑌷𑌹𑌰𑍀𑌶𑍍𑌵𑌰𑍋 𑌮𑍇 𑌪𑍌𑌲𑌸𑍍𑌤𑍍𑌯 𑌏𑌷 𑌸𑌮𑌰𑍇𑌷𑍁 𑌪𑍁𑌰𑌃 𑌪𑍍𑌰𑌹𑌰𑍍𑌤𑌾। 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌰𑍇𑌣 𑌕𑌥𑌿𑌤𑍌 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑍇𑌨 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌮𑍁𑌭𑍌 𑌭𑌰𑌤𑍋 𑌵𑌵𑌨𑍍𑌦𑍇" "துர்ஜாதபந்து: அயம் ருக்ஷஹரீசுவரோ மே பௌலஸ்த்ய ஏஷ ஸமரேஷு புர: ப்ரஹர்த்தா, இத்யாதரேண கதிதௌ ரகுநந்தநேந வ்யுத்க்ரம்ய லக்ஷ்மணமுபௌ பரதோ வவந்தே" என்று சொல்லப்பட்டிருக்கிறது. (இது பெருமாள் பரதாழ்வானைக் குறித்தருளிச்செய்யும் வார்த்தை) இதன் அர்த்தம்:—ருக்ஷங்களுக்கும், வானரர்களுக்கும் மஹாராஜாவான ஸுக்ரீவன் எனக்கு ஆப்தபந்து; இந்த விபீஷணாழ்வான் யுத்தங்களில் முன்னின்று யுத்தம் பண்ணுகிறவர்; என்று சொல்லிய வார்த்தையைக்கேட்டு மஹாராஜரையும், விபீஷணாழ்வானையும் பரதன் தெண்டனிட்டார். இளையபெருமாளை, தனக்குப்பின் பிறந்தவரென்கிற கிரமத்தை அதிக்ரமித்து, அவருக்குப் பெருமாளிடத்திலிருக்கும் பக்த்யதிசயத்தைக்கண்டு பரவசராய் தெண்டனிட்டார் என்பதாம். இப்படியே அதன் வ்யாக்கியாதாவான மல்லிநாதர் வ்யாக்யானம் பண்ணியிருக்கிறார். ஸங்கல்ப ஸூர்யோதயத்தில், விவேகன், ஸுமதி, விஷ்ணுபக்தி இவர்களுடைய ஸமாகமத்தில் விஷ்ணுபக்தியைப் பார்த்து நம்மால் ப்ரதிஷ்டிதையாயிருந்தபோதிலும் ஈசுவரனுடைய மூர்த்திபோலிருக்கிற விஷ்ணுபக்தியை ஸுமதியே! நீயும் நமஸ்கரிக்கவேணும் என்று ஸுமதி நமஸ்கரிக்கும்படி செய்துவிட்டு, தானும் நமஸ்கரித்தபிறகு விஷ்ணுபக்தியும், எனக்கு பூர்வஜனாயிருக்கிற உமக்கு ப்ரதிவந்தனம் பண்ணுகிறேன் என்றிருக்கிறது. (இது பத்தாவது அங்கத்திலிருக்கிறது) அந்த வாக்யங்கள் வருமாறு:— "(𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂) 𑌮𑌹𑌾𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌾 𑌏𑌷𑌾 𑌮𑌮 𑌵𑌨𑍍𑌦𑌨𑍀𑌯𑌾 (𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂) [illegible] 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌭𑌕𑍍𑌤𑍇 𑌪𑍍𑌰𑌣𑌿𑌪𑌾𑌤𑍇𑌨 [illegible]। [illegible]॥ [illegible]

புருஷ மூர்த்திமிவ ப்ரணந்துமர்ஹஸி। விஷ்ணுபக்தி: ஸப்ரச்ரயம் மஹாராஜ அநாதி ஸம்ஸார ஸாகர நிமக்நம் அஸ்மத் குலபதிம் புருஷமுத்ருதவதே பூர்வஜாய பவதே ப்ரதிப்ரணாமம் அபிரோசயாமி” “(ஸ்வாகதம்) மஹாப்ரபாவா ஏஷா மம வந்தநீயா (ப்ரகாசம்) விதிவச நியமேந விஷ்ணுபக்தே ப்ரணிபதநேந வயக்ரமாதிகோபி, உசிதமுபசராமி விச்வமாந்யாம் ஹரிபதபக்மரதிம் பராமஹம்த்வாம். ஸாம்ப்ரதிம் விலோக்ய ப்ரியேத்வமப்யேநாம் அஸ்மத் ப்ரயுக்த ப்ரதிஷ்டாமபி ஆதிபுருஷ மூர்த்திமிவ ப்ராணந்துமர்ஹஸி, விஷ்ணுபக்தி: ஸப்ரச்ரியம் மஹாராஜ அநாதி ஸம்ஸார ஸாகர நிமக்நம் அஸ்மத் குலபதிம் புருஷமுத்ருதவதே பூர்வஜாய பவதே ப்ரதிப்ரணாமம் அபிரோசயாமி” என்க.

பாரதத்தில், அத்தியந்தம் வயோதிகரான மார்க்கண்டேயர் அதிந்யூனவயஸ்கரான பராசரரை அவருடைய ஜ்ஞாதிக்கத்தைப் பார்த்து நமஸ்கரித்தாரென்று சொல்லியிருக்கிறது. இதை அநுஸரித்தே ஈட்டிலும் “அம்மணியாழ்வான் சிஷ்யனைத் தெண்டனிட்டு நிற்குமாம்” என்றருளிச் செய்திருக்கிறார். ஒருகால் ஸ்ரீபாஷ்யகாரர் பஹுசிஷ்யர்களுடன் எழுந்தருளும்போது பாஷ்யகாரருக்கு ஆசார்யரான பெரியநம்பி பரவசராய் தெண்டம் ஸமர்ப்பித்ததாக ஆசார்ய ஸூக்தியுமிருக்கிறது. ஈசுவரனும் பாகவதவிஷயத்தில் சேஷவ்ருத்தியை அநுஷ்டிக்கிறானென்று தேசிகன் அருளிச்செய்திருக்கிறார். ஈசுவரனுக்கு ஸர்வ சேஷித்வம் ஸ்வரூபமாயிருந்த போதிலும் ஸார்வபௌமனான ராஜாவுக்கு அபிமதையான மஹிஷீ விஷயத்தில் அநுவர்த்தன ப்ரணாமாதிகள் ஏற்பட்டிருப்பதுபோல் அத்யந்தாபிமதையான பிராட்டியைக்காட்டிலும் அத்யந்தாபிமதர்களான பாகவதர்களிடத்தில் அநுவர்த்தநாதிகள் ஏற்பட்டிருக்கின்றன.

இந்த விஷயம் பாகவதத்தில் ஏகாதசஸ்கந்தத்தில், “நிரபேக்ஷம் முநிம் ஶாந்தம் நிர்வைரம் ஸமதர்சநம்। அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூயேயேத்யங்க்ரிரேணுபி:” “நிரபேக்ஷம் முநிம் சாந்தம் நிர்வைரம் ஸமதர்சிநம், அநுவ்ரஜாம்யஹம் நித்யம் பூ

யேத்பங்க்ரி ரேணுபி:" என்று பகவான் அருளிச்செய்திருக்கிறார். இதன் அர்த்தம்:— ஒன்றிலும் அபேக்ஷயில்லாதவனையும் மநநசீல னையும், சாந்தியோடு கூடினவனையும், ஒருவரிடத்திலும் த்வேஷ மில்லாதவனையும் ஸர்வத்ர ஸமதரிசியாயுமிருக்கிற புருஷனை அவனு டைய பாததூளியாலே நான் பரிசுத்தனாகும்பொருட்டுப் பின் செல் கிறேன் என்பதாம்.

இப்படியே ஆழ்வார் விஷயத்திலும் சேஷசேஷிபாவம் மாறுடி ஸர்வேசுவரன் ஸம்ச்லேஷித்ததாக "உருகுமால் நெஞ்சம்" என் கிற திருவாய்மொழியில் வ்யக்தமாக இருக்கிறது.

ஆதலால் விதியில் காட்டிலும் ராகம் ப்ரபலமாகையாலே அந்த ராகப்ரேரிதராய் சேஷசேஷிபாவம் மாறுடி பாகவதர்கள் பரஸ்பரம் இருப்பது ப்ரமாணங்களாலும் ஆசாரத்தாலும் ஸித்தம். ஆச்ரமம், வயஸ்ஸு, மற்ற உத்கர்ஷஹேதுக்கள் இவைகளெல்லாவற்றையுங் காட்டில் ஜ்ஞானமே உத்க்ருஷ்டமாகையால் அந்த ஜ்ஞானத்தா லேயே ப்ராஹ்மணர்களுக்கு ஜ்யைஷ்ட்யம் ஏற்படுமென்று மனுஸ் ம்ருதியில் சொல்லியிருப்பதும் கண்டுகொள்க.

அப்படியே "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி। தயோர்மத்யே கதோ விஷ்ணு:" "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி, தயோர்மத்யே கதோ விஷ்ணு:" என்கிற ப்ரமாணத்திலும் வைஷ்ண வர்கள் இருவருடைய ஸமாகமத்தில் நடுவே ஸர்வேசுவரன் எழுந் தருளியிருப்பதாகச் சொல்லியிருப்பதால் பரஸ்பரம் இவர்கள் வந்த னம பண்ணிக்கொள்வதும் ஸர்வேசுவரனிடத்திலேயே சேரும்.

அங்ஙனமன்றிக்கே "ஜங்கம ஸ்ரீவிமாநாநி ஹ்ருதயாநி மநீஷி ணாம்" "ஜங்கம ஸ்ரீவிமாநாநி ஹ்ருதயாநி மநீஷிணாம்" என்கிற ப்ரமாணத்தின்படி ஈசுவரன் எழுந்தருளியிருக்கும் ஜங்கம விமா நங்களாகையாலே பரஸ்பரம் வந்தநீயர்கள்.

ஆதலால் ஸ்ரீவைஷ்ணவர்கள் பரஸ்பரம் வந்தநீயர்கள் என் பது நிரூபிக்கப்பட்டது. மேல் வந்தன விஷயத்தில் ஜாத்யாச்ரம நியமமில்லை என்பது நிரூபிக்கப்படும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸாரம்.

(39-ம் பக்கத்தொடர்ச்சி)

“ஸவெ-வெஷாயதஸ்வஷரோஜநந்தி” “ஸர்வேவேதாயத்பதமாமநந்தி” (எல்லா வேதங்களும் எந்த பரமாத்மஸ்வரூபத்தைச் சொல்லுகின்றனவோ) என்கிற சுருதி வாக்யத்தாலும் “வெடெஷெஶ்ச ஸஷெ-ரஹமெவ வெஷ்யஃ” “வேதைச்ச வைரஹமேவவேத்ய:” (எல்லா வேதங்களாலும் நானேயறியத்தகுந்தவன்.) என்கிற பகவத் வாக்யத்தாலும் ஸகல வேதங்களும் பரமாத்மாவையே பரதிபாதிக்கிறதென்பது கிடைகிறது. “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம” “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்ப்ரஹ்ம” என்கிற வாக்யம்போல் ஸாக்ஷாத் ப்ரஹ்மஸ்வரூப ப்ரதிபாதகமான வாக்யங்கள் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறதென்பது பொருத்தமுடையதேயாகும். அப்படியன்றி அக்நீந்திராதிவாசக சப்தங்கள் ப்ரஹ்ம ப்ரதிபாதக மாகாவே; அப்போது “ஸர்வை: வேதை:” என்பது சேருவதெப்படி? “தத்வமஸி” “தத்வமஸி” “அயமாத்மா ப்ரஹ்ம” “அயமாத்மா ப்ரஹ்ம” என்று சேதநாசேதனங்களும் ப்ரஹ்மமும் ஒன்றெனக்காட்டும் ஸாமாநாதிகரண்யம் பொருந்துவதெப்படி? ஸமாநாதிகரண்யம் என்பதுவெவ்வேறு விசேஷணங்களைக்கொண்டு ஒரே விசேஷ்யத்தைக் காட்டுவதாகவன்றோ இருப்பது. இங்கு “தத்வமஸ்” யாதி இடங்களில் விசேஷ்யங்களும் வெவ்வேறுயிருக்க, ஸமாநாதிகரண்யம் எப்படிச் சேருவது? என்று பரீக்ஷித்து சங்கிக்க, அதற்கு ஸ்ரீசுகர் ப்ரஹ்மமானது, உலகத்தைச் சிருஷ்டித்து அதற்குள் தான் ப்ரவேசித்து நாமரூபங்களை யுண்டுபண்ணி அவைகளைச் சரீரமாகக்கொண்டுதான் சரீரியாக நிற்கையாலே சரீரவாசக சப்தங்கள் சரீரிவரை சொல்லக்கூடியதுகொண்டு ஸர்வவேதங்களும் எம்பெருமானைச் சொல்லத்தட்டில்லை. ஒவ்வொரு பதமும் பரமாத்மாவையே சொல்லுகிறதாகையாலே வெவ்வேறு விசேஷணங்களைக்கொண்டு ஒரு விசேஷ்யத்தைக் குறிப்பித்துக் காட்டுகிற ஸமாநாதி கரண்யத்துக்கும் விரோதமில்லை. ஆனால் ஒவ்வொரு பதமும் பரமாத்மாவையே சொல்லுகிறமுறை நமக்கு அநுபவத்துக்கு வாராததுகொண்டு

பரமாத்மாபர்யந்தம் சொல்லக்கூடிய வ்யுத்பத்தி பதங்களுக்கு இல்லை என்று சொல்ல முடியாது. இவன் தெரிந்துகொள்ளாததே தவிர பதங்களுக்கு அப்படிப்பட்ட சக்தியேதான் உள்ளது. ஒருவன் கடபதத்திற்குப் பொருள்தெரியாதிருந்தாலும் அதற்கு மாறாக வஸ்திரமே அதன் பொருளென்றிருந்தாலும், அதன் உண்மைப்பொருள் மாறிவிடாது. அதுபோல வேதாந்தஜ்ஞாநமில்லாவிடில் பதங்கட்கு ப்ரஹ்மபர்யந்த போதமுண்டாவதில்லை. அந்த ஜ்ஞாநமுண்டாகில் ப்ரஹ்ம பர்யந்தம் போதம் பதங்கட்குத் தன்னிடைவே உண்டாகும். இவ்வர்த்தம் வேதாந்தார்த்தம் கைபுகுந்த ப்ரஹ்லாத வாமதேவாதிகட்கு அநுபவ ஸித்தம். "𑌐𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑍍" "மத்தஸ்ஸர்வ மஹம்ஸர்வம்" (என்னிடத்திலிருந்தே எல்லாமுண்டாகின்றன; நானே எல்லா வஸ்துக்களுமாயிருக்குமவன்) என்று பிரஹ்லாதரும், "𑌸𑌰𑍍𑌵𑌗𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌸 𑌏𑌵𑌾𑌹𑌮𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃" "அஹமநுரபவம் ஸூர்யச்ச" (நானே மநுவும் ஸூர்யனுமானேன்) என்று வாமதேவரும் அஹம் சப்தத்திற்குப் பரமாத்மபர்யந்த போதத்தை அநுபவித்தார்கள்.

மேலும், "கடல்ஞாலஞ் செய்தேனும் யானே" என்று ஆழ்வாரும், "இன்று கணபுரம் இடவகை கொள்வது யாமென்று பேசினாள்" என்று திருமங்கைமன்னனும் பேசியிருப்பதையுங் காணலாம். இப்படி இந்த வ்யுத்பத்தி ப்ரகாரத்தைப் பேசுமிடத்தில் "𑌸𑍈𑌷𑌾 𑌹𑍍𑌯𑍁𑌪𑌨𑌿𑌷𑌦𑍍 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑍀 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌜𑍈𑌰𑍍𑌕𑍃𑌤𑌾, 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌧𑌾𑌰𑌯𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌗𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑌿𑌞𑍍𑌚𑌨𑌃" "ஸைஷாஹ்யுபநிஷத் ப்ராஹ்மீ பூர்வேஷாம் பூர்வ ஜைர்க்ருதா, ச்ரத்யாதாரயேத்யஸ்து க்ஷேமம் கச்சேதகிஞ்சந:" என்று பேசியிருக்கிறார். அதாவது ஒவ்வொரு பதத்துக்கும் பிரஹ்ம பர்யந்தம் போதன சக்தியுள்ளதென்பது அதிரஹஸ்யம். இது பிரஹ்லாத வாமதேவாதிகளாலும் ஸநகாதிகளாலும் நிர்ணயிக்கப்பட்டது. இந்த வ்யுத்பத்தியை அநுஷ்டாநோபயோகியாகும்படி ச்ரத்தையுடன் தரிக்குமவன் உபாயாந்தரகந்தமற்று மோக்ஷத்தை யடைவானென்றபடி.

'ப்ராஹ்மீளைஷா' ப்ரஹ்மஸம்பந்தியான அபிதாவ்ருத்தியானது, 'உபநிஷத்' குஹ்யதமம் என்றபடி. "பூர்வேஷாம் பூர்வஜை:" என்கையாலே ஸநகாதிகளாலும், ப்ரஹ்லாதாதிகளாலும் தரிக்கப்பட்டபடி சொல்லிற்று. 'ச்ரத்தயாதாரயேத்' என்கையால் ஜ்ஞாநிகளுக்கும் இந்த வ்யுத்பத்தியில் அநுஷ்டாநோபயோகியான விச்வாசமுண்டாவது அருமையென்று தோன்றுகிறது. இந்த சக்திஜ்ஞாநம் உண்டாகுமாகில் உபாயாந்தர ப்ரவ்ருத்யநர்ஹதாஜ்ஞாநம் தன்னடைவே விளையும். இந்த வ்யுத்பத்தியுண்டாவது மிகவும் அருமை. இதை பாஷ்யகாரர் ஒருவரே மஹதாப்ரபந்தேந தெளிவாகக் காட்டியிருக்கிறார். இதன் உண்மையறியாமையாலே தான் பல வேறு மதங்கள் வெளிப்பட்டன.

வேதவாக்யங்களை ப்ரமாணமாகக்கொண்ட வைதிகர்களுக்கும் "𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀 𑌶𑌰𑍀𑌰𑌂" "யஸ்யாத்மா சரீரம் யஸ்யப்ப்ருதிவீ சரீரம்" என்று சுருதி 'சேதநா சேதனங்களை ஈசுவரனுக்குச் சரீரமென்று பேசுவதற்கு மனந்துணியாமையால் ஒரு சிலர் சுருதிவாக்யங்களில் சிலவற்றை முக்யமாகவும், சிலவற்றைக் கௌணமாகவும்கொண்டனர். வேறுசிலர் அவர் முக்யமாகக்கொண்டவற்றைக் கௌணமாகவும், கௌணமாகக்கொண்டவற்றை முக்யமாகவும் கொண்டனர். இவ்வாறாக வைதிகமதப் பலவாறு பெருகத்தலைபட்டுச் சுருதி வாக்யங்களில் கௌணமுக்யவிபாகம் பண்ணும்போது "𑌬𑌿𑌭𑍇𑌤𑍍𑌯𑌲𑍍𑌪 𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌦𑍍 𑌵𑍇𑌦𑌃" பிபேத்யல்ப ச்ருதாத் வேத:" என்றபடி வேத புருஷனுக்கு ஒரு நடுக்கம் தலையெடுக்க நேர்பட்டது. பரமகாருணிகரான பகவத் பாஷ்யகாரர் இந்த முடிச்சை அவிழ்த்துவிட வேதவாக்யங்கள் முழுமையும் முக்யமாகப் பொருந்தும்படி அருளிச்செய்து வேத புருஷனது உள்நடுக்கத்தை யகற்றினர். "𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌜𑍍𑌵𑌰𑌮𑌶𑍀𑌶𑌮𑌤𑍍" அந்தஜ்வரமசீசமத்" என்று அதைப்பெரியோர்கள் பேசினர்கள்.

தொடரும்.

காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே. சிங்கப்பெருமாள் ஸ்வாமியின்,
தமையனார் குமாரரும், அந்தேவாசியுமான
வேங்கடாசார்யர், சேரன்குளம்.

ஸ்ரீ:

யக்ஷப்ரச்நம்.

(56-ம் பக்கத்தொடர்ச்சி.) *

(௰௭) யக்ஷ:- 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿 ।

𑌕𑌿𑌂𑌨𑍁 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌰𑍍𑌥𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌕𑌿𑌂𑌨𑍁 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

கிந்நுஹித்வா ப்ரியோ பவதி கிந்நுஹித்வா நசோசதி
கிந்நுஹித்வா அர்த்தவான் பவதி கிந்நுஹித்வா ஸுகீபவேத்.

(இ-ள்.) எதைவிட்டு ப்ரியனாகிறான்? எதைவிட்டுத் துக்கிப்பதில்லை? எதைவிட்டுத் தனவானாகிறான்? எதைவிட்டுச் சுகமுள்ளவனாகிறான்? எ-ம்.

தர்ம:- 𑌮𑌾𑌨𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌕𑍍𑌰𑍋𑌧𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌨 𑌶𑍋𑌚𑌤𑌿
𑌕𑌾𑌮𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾𑌽𑌰𑍍𑌥𑌵𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌲𑍋𑌭𑌂 𑌹𑌿𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑍀 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

மாநம்ஹித்வா ப்ரியோ பவதி க்ரோதம்ஹித்வா நசோசதி
காமம்ஹித்வா அர்த்தவாந் பவதி லோபம்ஹித்வா ஸுகீபவேத்.

---

* முன்வெளியேறிய சஞ்சிகையில் 56ம் பக்கத்தில் 61ம் நம்பரிற் குறிப்பிட்டுள்ள 'ஸத்துக்களுடைய சேர்க்கை நசிப்பதில்லை, என்பதற்கு எழுதாது விடுபட்ட குறிப்புரை இங்கு வரையப்படுகிறது.

இங்கு, 'நசிப்பதில்லை' என்பதற்குப் பயனற்றதாவதில்லை என்று பொருள் கொள்ளத்தக்கது. ஸத்துக்களாகிய பெரியோர்கள் உசாத்துணையாயிருந்து ஹிதோபதேசத்தால் அஜ்ஞாநத்தையகற்றி ஸத்கெதியடையும்படி செய்வாராதலால் அவருடைய சேர்க்கை பயனுடையதாகவே யிருக்கும். அதனால் இங்கு 'ஸத்துக்களுடைய சேர்க்கை நசிப்பதில்லை' என்று சொல்லப்பட்டது. இதனால் முன்னுரைக்கப்பட்ட மனோநிக்ரஹமார்க்கமும் ஸத்துக்களாலே உபதேசிக்கத்தக்கதென்பது பெறப்படும்.

(௰௮) இனி, முன்னர்க் கூறப்பட்ட மனவடக்கத்தைப்பெறுதற்குரிய சில த்ருஷ்ட ஸாதனங்கள் உரைக்கப்படுகின்றன.

(இ-ள்.) (62) மானத்தைவிட்டு ப்ரியனாகிறான். (63) வெகுளியைவிட்டுத் துக்கிப்பதில்லை. (64) காமத்தைவிட்டுத் தனவானாகிறான். (65) லோபத்தைவிட்டுச் சுகமுள்ளவனாகிறான் எ-ம்.

(௬அ) 𑌪𑍍𑌰𑌶𑍍𑌨:- 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌦𑌾𑌨𑌂 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌨𑌟𑌨𑌰𑍍𑌤𑌕𑍇
𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚𑍈𑌵 𑌭𑍃𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌂 𑌚𑍈𑌵 𑌰𑌾𑌜𑌸𑍁 ॥

கிமர்த்தம் ப்ராஹ்மணே தானம் கிமர்த்தம் நடநர்த்தகே
கிமர்த்தம் சைவ ப்ருத்யேஷு கிமர்த்தம் சைவ ராஜஸு.

---

(62) மானம் என்றது 'எம்மின் மிக்கோரில்லை' என்கிற துரபிமானமாகிய கெர்வத்தை. ஆத்மகுணத்தை யழிக்கின்ற கெர்வம் ஒருவனிடத்திருக்குமாயின் அவன் யாவராலும் வெறுக்கப்படுவான். அஃதொழியுமேல் அவன் யாவராலும் விரும்பப்படுவனாதலால் 'மானத்தைவிட்டுப் பிரியனாகிறான்' என்றுரைக்கப்பட்டது.

(63) "மறத்தல் வெகுளியை யார்மாட்டுந்தீய, பிறத்த லதனான் வரும்" என்றபடி வெகுளியானது உட்பகையாய்நின்று அருள் முதலிய நற்குணங்களையடியோடு அழிப்பதோடு ஞானம் சிறிதும் அணுகவொட்டாமல், அதையுந்தடுத்து உயிர்க்கு எப்பொழுதும் தீமையை யுண்டுபண்ணும். இதை ஒழிப்பது சோகமுறாது இன்புறுதற்குக் காரணமாயிருக்குமாதலால் 'வெகுளியைவிட்டுத் துக்கிப்பதில்லை' என்று சொல்லப்பட்டது.

(64) காமம் என்றது பேராசையை. இப்பேராசையானது சிந்தையின் னிறைவுக்குத் தடையாயிருக்கும், இஃதகலவே சிந்தையின் னிறைவுண்டாம். இதுவே சிறந்த தனமாக மதிக்கப்படும். "செல்வமென்பது சிந்தையின்னிறைவே" என்பதனாலுமறியலாம். இதுபற்றியே திருக்குறளிலும் "வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை, யாண்டு மஃதொப்ப தில்" என்று சொல்லப்பட்டுளது. அதனால், 'காமத்தைவிட்டுத் தனவானாகிறான்' என்று சொல்லப்பட்டது.

(65) லோப குணமானது, நல்லறிவைத்தடுத்து சிந்தை யின்னிறைவைத்தாராது துன்பத்தைத் தரும். அஃதொழியமேவ இன்பமுண்டாமாதலால் 'லோபத்தைவிட்டுச் சுகமுள்ளவனாகிறான்' என்றுரைக்கப்பட்டது.

(௬அ) "அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும், இழுக்கா வியன்ற தறம்" என்றபடி பொறாமை முதலிய துர்க்குணங்களாகிய மனமாசகற்றிச் செய்வதே சிறந்த தர்மமாம். இத்தகைய தர்மம் செய்தற்கு யோக்யதையையுண்டுபண்ணித் தருகிற சித்தசுத்தியை அளிப்பது தானமாம் என்று சொல்லப்பட்டது. அத்தானம் இன்னவிடத்திற் செய்வதே சிறப்புடையதாம் என்று இங்குரைக்கப்படுகிறது.

(இ-ள்.) ப்ராஹ்மணர்க்கு ஈவது எதற்கு? யாது கருதி நடநர்த்தகர்கட்கு ஈவது? அடிமைத்தொழில் செய்பவர்க்கு ஈவது எதற்கு? யாதுபற்றி அரசர்க்கு ஈவது? எ-ம்.

தர்ம:- 𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌂 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇 𑌦𑌾𑌨𑌂 𑌯𑌶𑍋𑌰𑍍𑌥𑌂 𑌨𑌟𑌨𑌰𑍍𑌤𑌕𑍇
𑌭𑍃𑌤𑍍𑌯𑍇𑌷𑍁 𑌭𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌵𑍈 𑌭𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌚𑍈𑌵 𑌰𑌾𑌜𑌸𑍁 ॥

தர்மார்த்தம் ப்ராஹ்மணே தாநம் யசோர்த்தம் நடநர்த்தகே
ப்ருத்யேஷு பரணார்த்தம் வை பயார்த்தம் சைவ ராஜஸு.

(இ-ள்.) 66 ப்ராஹ்மணர்க்கு (வேதம் வல்லார்களான பிராமணர்க்கு) ஈவது அறத்தின் பொருட்டாம். (67) நடநர்த்தகர்க்கு ஈவது புகழ் கருதியாம். (68) அடிமைத் தொழில்செய்பவர்க்கு ஈவது தன்னை யுபசரிப்பதற்காம். (69) அரசர்க்கு ஈவது பயத்தின் பொருட்டாம் எ-ம்.

(௰௯) யக்ஷ:- 𑌕𑍇𑌨𑌸𑍍𑌵𑌿𑌦𑌾𑌵𑍃𑌤𑍋 𑌲𑍋𑌕𑌃 𑌕𑍇𑌨𑌸𑍍𑌵𑌿𑌨𑍍𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇
𑌕𑍇𑌨 𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌕𑍇𑌨 𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌨 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

கேநஸ்விதாவ்ருதோ லோக: கேநஸ்விந் ந ப்ரகாசதே
கேநத்யஜதி மித்ராணி கேந ஸ்வர்க்கம் ந கச்சதி.

(இ-ள்.) எதனுல் உலகம் மறைக்கப்படுகிறது? எதனுல் அது விளங்குகிறதில்லை? எதனுல் நண்பரை விடுகின்றுன்? எதனுல் துறக்கத்தை யடைவதில்லை? எ-ம்.

(66—69.) கீர்த்தியுண்டாவதைக் குறித்து நடநர்த்தகர்கட்கும், தன்னை யுபசரிக்கின்ற காரணம்பற்றி அடிமையாளர்க்கும், ராஜதண்டனைக்குப்பயந்து அரசர்க்கும் ஈவதெல்லாம் பயன்கருதிச் செய்வனவாமாதலால்; இவை சிறந்ததாக மதிக்கப்படமாட்டா. அறிவொழுக்கங்களையுடை ப்ராஹ்மஜ்ஜானிக்குச் செய்யுந்தானமே பயன்கருதிச் செய்யாததாய், "அறப்பயன், தான் சிறிதாயினும் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" என்றபடி பெரிதும் பயனைத்தருவதாயிருக்குமாதலால் அதுவே செய்யத்தக்கதென்பது கருத்தாகக்கொள்க. இதனுல் தக்கார்க்கு ஈயுந்தானத்தின் பலனுக மனமாசறுதலும், அதனுல் மனவடக்கமும், அதனுல் சோக நிவிர்த்தியும் பேரின்பமுமுற்று வாழலாமென்பது பெறப்படும்.

(௰௧) மனவடக்கத்தால் பேரின்பத்தைப் பெறக்கூடுமாயின் முன்னர் த்ரயீதர்மம் என்பது எப்பயனை நோக்கிக்கூறப்பட்டதாம்; என்ற ஆசங்கைக்கு ஸமாதானம் உரைக்கப்படுகிறது.

தர்ம:- 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌨𑌾𑌵𑍃𑌤𑍋 𑌲𑍋𑌕𑌸𑍍𑌤𑌮𑌸𑌾 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍇 ।
𑌲𑍋𑌭𑌾𑌤𑍍𑌤𑍍𑌯𑌜𑌤𑌿 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌂 𑌨 𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥

அஜ்ஞாநே நாவ்ருதோ லோகஸ் தமஸா ந ப்ரகாசதே
லோபாத்யஜதி மித்ராணி ஸங்காத் ஸ்வர்க்கம் ந கச்சதி.

(இ-ள்.) 70 அறியாமையால் உலகம் மறைக்கப்படுகிறது. (71) இருட்டினாலது விளங்குகிறதில்லை. (72) லோபத்தினால் நண்பரை

---

(70) இங்கு அறியாமை என்றது அறியாமையின் கார்யமாகிய ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களை யுணர்த்தும். லோகமென்பது "𑌜𑌰𑌾𑌮𑌰𑌣 𑌶𑍋𑌕𑌮𑍋𑌹𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌲𑍋𑌕𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌲𑍋𑌕𑌃" என்றவ்யுத்பத்தியினால் ஜராமரண சோகமோஹங்களுக்கு ஆசிரயனாகக்காணப்படுகிறஜீவனைக் குறிக்கும். இவ்வறியாமையின் கார்யமான ஸ்தூலஸூக்ஷ்ம சரீரங்களோடு ஜீவன் மறைக்கப்படுகிறானதலால் 'அறியாமையால் உலகம் மறைக்கப்படுகிறது' என்று சொல்லப்பட்டது. இதனால் முமுக்ஷுவான ஜீவன் இவைகளை ஒழிக்கவேண்டுமானால் த்ரயீதர்மத்தைக் கொண்டொழிக்க வேண்டுமென்பதும், மனவடக்கத்தால் மாத்திரம் அவற்றை ஒழிக்கமுடியாதென்பதும் பெறப்பட்டனர்.

இனி, ஜீவனுக்கு ஸுஷுப்தி நிலையிலும் இச்சரீர நாசம் ஏற்படுவதாயிருக்க த்ரயீதர்மம் எதற்கு என்ற ஆசங்கை மறுபடியும் நிகழ அதற்குச் சமாதானம் உரைக்கப்படுகிறது.

(71) இருட்டென்பது ஸுஷுப்தி நிலையில்தான் (ஆத்மா) சரீரத்தினின்றும் ஒழிந்திருப்பதை உணராமற் செய்கின்ற அஜ்ஞாநத்தை ஜீவன் ஸுஷுப்தி நிலையில் ஸ்தூலஸூக்ஷ்ம சரீரங்களை ஒழித்து நின்றானாயினும் முன்னுரைக்கப்பட்ட அஜ்ஞாநத்தால் ஒழிந்திருக்கும் தன்னிலையறியப்படுகிறதில்லையாதலால் 'இருட்டினாலது விளங்குகிறதில்லை' என்றுசொல்லப்பட்டது. இதனால் ஸுஷுப்திகாலத்தில் தோன்றுமந்நிலைமை இவ்வாறிருந்ததென்றுணரப்படாமையாலும், அது நிலைத்திருப்பதில்லை யாதலாலும் எப்பொழுதும் அச்சரீரங்களை ஒழித்துநின்று நிலைபெற்ற பேரின்ப வாழ்வைப் பெற விரும்பும் ஜீவன். இவ்வாழ்வைப் பெறுதற்குரிய சாதனமான த்ரயீ தர்மத்தை அவசியம் கைக்கொள்ளவேண்டுமென்பது பெறப்படும். மேலும் அஜ்ஞாநத்தின் கார்யமாகிய சரீரத்தை ப்ரக்ருதி தத்வமாகிய மனவடக்கத்தைக் கருவியாகக்கொண்டு ஒழிக்க வியலாதென்பதும், "ஜ்ஞாநாந்மோக்ஷ:" என்றபடி ஞானத்தால் ப்ரக்ருதியைக் கடக்கவேண்டுமாதலால் த்ரயீதர்மத்தைக் கையாளவேண்டுவது முக்யகடமை என்பதும் ஈண்டாராயத்தக்கன.

இனி மோக்ஷஸாதனமான த்ரயீதர்மத்திற்குத் தடையாயிருப்பவை இவை என்பதுரைக்கப்படும்.

(72) நண்பரென்றது த்ரயீதர்மத்தை உபதேசிக்கும் பெரியோர்களை. லோபம் என்ற துர்க்குணம் குடிகொண்டிருக்குமாகில் பெரியோர்பாற்

விடுகிறான். (73) ஸங்கமத்தினால் துறக்கத்தை யடைகிறதில்லை; எ-ம்.

(உ-ம்) யக்ஷ:- 𑌮𑍃𑌤𑌃 𑌕𑌥𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌥𑌂 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌂 𑌮𑍃𑌤𑌂𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌮𑍃𑌤𑌂 𑌕𑌥𑌂𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌥𑌂 𑌯𑌜𑍍𑌞𑍋 𑌮𑍃𑌤𑍋𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

ம்ருத: கதம் ஸ்யாத் புருஷ: கதம் ராஷ்ட்ரம் ம்ருதம்பவேத்
ச்ராத்தம் ம்ருதம் கதம்வா ஸ்யாத் கதம் யஜ்ஞோ ம்ருதோபவேத்.

(இ-ள்) மானிடன் எவ்வாறிறந்தவனாகிறான்? ராஜ்யம் எவ்வாறிறந்ததாகிறது? ச்ராத்தம் எவ்வாறிறந்ததாகிறது? வேள்வி எவ்வாறிறந்ததாகிறது? எ-ம்.

தர்ம:- 𑌮𑍃𑌤𑍋 𑌦𑌰𑌿𑌦𑍍𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌮𑍃𑌤𑌂 𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌰𑌾𑌜𑌕𑌂 ।
𑌮𑍃𑌤𑌮𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌶𑍍𑌰𑌾𑌦𑍍𑌧𑌂 𑌮𑍃𑌤𑍋 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌃 ॥

ம்ருதோ தரித்ர: புருஷ: ம்ருதம் ராஷ்ட்ர மராஜகம்
ம்ருத மச்ரோத்ரியம் ச்ராத்தம் ம்ருதோ யஜ்ஞஸ்த்வ தக்ஷிண:.

(இ-ள்) 74 தரித்திரமுடைய மானிடனே இறந்தவனாகிறான்.

சென்று உபதேச முறைகளைக் கேளாதொழிவானாதலால் 'லோபத்தால் நண்பரை விட்டுவிடுவான்' என்று சொல்லப்பட்டது.

(73) ஸங்கமாவது காம விஷயமான கூட்டுறவாம். இவ்விச்சை குடிகொண்டிருக்குமாகில் ஒருபொழுதும் அவன் மோக்ஷமடைவதில்லை யாதலால் 'ஸங்கமத்தினால் துறக்கத்தை அடைகிறதில்லை' என்றுரைக்கப்பட்டது. இதனால் பெரியோர்பால் உபதேசம் பெறுதொழிவதும், காம நுசர்ச்சியில் விருப்பமும் என்ற இவ்விரண்டும் வீடு பேற்றையடைவதற்குத் தடையாயிருப்பனவாமென்றறியத்தக்கது.

(உ-ம்) இனி லோபம் முதலிய கெட்ட குணங்களை விலக்காதிருப்பவர்கட்கு வரும் ஏதமுரைக்கப்படுகிறது.

(74) இங்குத் தரித்திரன் என்றது லோபகுணத்தால்பிறருக்குஒன்று மீயாதவனை. "இன்மையுளின்மை விருந்தோம்ப லோம்பாமடமை" என்பத

(75) அரசனில்லாதொழியின் ராஜ்யம் இறந்ததாகிறது. (76) ச்ரோத்ரியனில்லாதொழியின் ச்ராத்தமிறந்ததாகிறது. (77) தக்ஷிணை இல்லாதொழியின் வேள்வி இறந்ததாகிறது; எ-ம்.

தொடரும்.

னாலும் ஸத் பாத்திரத்தில் ஈயாத லோபகுணமுடையவனே மிகவும் வறியனாவானென்பதறியலாம். "நடுவணெய்த விடுதலையுமெய்தும்" என்றபடி அறத்திற்கும் இன்பத்திற்கும் ஸாதானமாகிய பொருளை ஸத்பாத்திரத்தில் ஈந்துவந்து அதனால் அறப்பயனைப் பெற்றின்புறாது வாளாவிருக்கும் லோபகுணமுடையவன் உயிரோடிருந்தும் உயிர்ப்பசையற்றவனாதலால் 'தரித்திரமுடையமானிடனே இறந்தவனாகிறான்' என்றுரைக்கப்பட்டது,

இனி உரைக்கப்பெறும் மூன்று விடைகளும், இவ்விஷயத்தை உவமைமுகத்தான் விளக்கத்தோன்றினவாம். அவை:—

(75) ராஜ்யம் என்றது இங்கு ப்ராணனாகிய அரசனுக்குச் சஞ்சாரஸ்தானமாகிய சரீரத்தையுணர்த்தும். அரசனென்றது சரீரத்தை அதிஷ்டித்திருக்கிற ப்ராணனை. இது, சரீரத்தை விட்டகன்றதாயின் அச்சரீரம் யாதொரு ப்ரயோஜனமுமற்றதாயொழிவதுபோல மனிதன் லோபகுணமுடையவனாயிருப்பானாகின் அவன் பயனற்றவனாவான் என்பதாம்.

(76) ச்ரோத்திரியன் என்றது வேதம் வல்லோனானவிப்பிரசன இத்தன்மையில்லாத ஒருவனை வரித்துச் செய்கின்ற சிராத்தமானது எவ்வாறு பயனற்றதாயும், குற்றத்தை விளைப்பதாயிருக்குமோ; அவ்வாறேலோபகுணமுடையவன் இம்மையிற் புகழ் முதலியவற்றைப்பெறாது பயனற்றவனாயொழிவதோடு மறுமையிலும் நிரயத்துன்பத்திற்காளாவானென்பதாம்.

(77) தக்ஷிணையின்றிச் செய்யும் யாகமானது எவ்வாறு நஷ்டமாய்விடுமோ; என்று அவ்வாறே லோபகுணமுடையவன் அறப்பயனைப்பெறாது நஷ்டமடைவானென்பதாம்.